செய்தி வெளியீட்டு எண்–395 நாள்– 19.07.2009

## செய்தி வெளியீடு

## சட்டப்பேரவை உறுப்பினர்களின் கோரிக்கைகளை ஏற்று பல்வேறு நிகழ்வுகளில் உயிரிழந்த 11 பேரின் குடும்பங்களுக்கு 5 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் நிதியுதவி !

# முதலமைச்சர் கலைஞர் ஆணை!

தமிழக சட்டப்பேரவையில் கவனஈர்ப்பு மற்றும் ஒத்திவைப்புத் தீர்மானங்களின்போது, சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் தெரிவித்த கோரிக்கைகள்மீது, மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து அறிக்கைகளைப் பெற்று; அந்த அறிக்கைகளின் அடிப்படையில் முதலமைச்சர் கலைஞர் அவர்கள், பல்வேறு நிகழ்வுகளில் உயிரிழந்த 11 பேரின் குடும்பங்களுக்கு 5 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிவாரண உதவிகளை வழங்கிட ஆணையிட்டுள்ளார்கள். அதன் விவரம்:

விளாத்திகுளம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.சின்னப்பன் கோரிக்கையை ஏற்று, துபாய் நாட்டில் இறந்துபோன தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த கார்த்திகேயன் என்பவரின் மனைவி திருமதி இராஜலட்சுமிக்கு 50 ஆயிரம் ரூபாய்;

மதுரை கிழக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு.என்.நன்மாறன், திண்டுக்கல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செல்வி கே.பாலபாரதி, சிவகங்கை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.குணசேகரன், பெரம்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு.கே.மகேந்திரன் ஆகியோரின் கோரிக்கைகளை ஏற்று, சிவகங்கை மாவட்டம், கண்டாங்கிப்பட்டி கிராமத்தில் வீட்டின் மேற்கூரை இடிந்து விழுந்ததில் இறந்துபோன இருவரில் கணேசன் என்பவரின் மனைவி திருமதி

**மொக்கம்மாள், மற்றொருவரான மாயன் என்பவரின் மனைவி திருமதி சுந்தரம் ஆகியோருக்கு தலா 50 ஆயிரம் ரூபாய்;**

**சீர்காழி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு.எம்.பன்னீர் செல்வம் கோரிக்கையை ஏற்று, நாகப்பட்டினம் மாவட்டம், தெற்கு தென்னங்குடியைச் சேர்ந்த கௌதமன் என்பவர் வாய்க்காலில் தவறி விழுந்து இறந்ததால் அவரது மனைவி திருமதி சாந்தாவுக்கு 50 ஆயிரம் ரூபாய்;**

**வேலூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு.சி.ஞானசேகரன் கோரிக்கையை ஏற்று, வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் அருகே சின்ன கந்திலி கிராமத்தில் மின்சாரம் தாக்கி இறந்துபோன குண்டன் மற்றும் அவரது மனைவி பெரியபாப்பா ஆகியோருக்காக தலா 50 ஆயிரம் ரூபாய் வீதம் அவர்களின் வாரிசுதாரர்களான திரு.முருகன் மற்றும் திருமதி கௌரம்மாள் ஆகியோருக்கு மொத்தம் 1 இலட்ச ரூபாய்;**

**திருமயம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. ராம சுப்புராம், திருவைகுண்டம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு.டி.செல்வராஜ், காங்கேயம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு.விடியல் எஸ்.சேகர் ஆகியோரின் கோரிக்கைகளை ஏற்று புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் தொகுதி, செம்பூதி கிராமத்தில் பாம்பு கடித்து பாகீரதியும் அவரது மகள் கீர்த்திகாவும் இறந்தனர். அவர்கள் இறந்த செய்திகேட்டு அதிர்ச்சியில் பாகீரதியின் தாயார் ராஜாமணி அம்மையாரும் இறந்துள்ளார். இதில் பாகீரதி அங்கன்வாடி பணியாளராகப் பணிபுரிந்ததால் குடும்ப நல நிதியாக 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயும், அவரது தாயார் திருமதி ராஜாமணி அம்மாளுக்கு தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்– விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) திட்டம் வாயிலாக 12 ஆயிரத்து 500 ரூபாயும் வழங்கப்பட உள்ளதால், பாகீரதியின் மகள் கீர்த்திகாவுக்காக அவரது தந்தை திரு.ராஜா என்பவருக்கு 50 ஆயிரம் ரூபாய்;**

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை சட்டப்பேரவை உறுப்பினர் திரு.சி.சண்முகவேலு கோரிக்கையை ஏற்று, அத்தொகுதியைச் சேர்ந்த மலையாண்டிப் பட்டினம் கிராமத்தில் கழிவுநீர்த் தொட்டியில் விழுந்து இறந்துபோன இரண்டு குழந்தைகளில் லோகவசந்த் என்னும் சிறுவனுக்காக அவனது தந்தையார் திருமலைசாமி; மற்றொரு குழந்தையாகிய சிறுமி சத்யஸ்ரீ என்பவருக்காக அவரது தந்தை சாமிதுரை ஆகியோருக்கு தலா 50 ஆயிரம் ரூபாய்;

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் திரு.அ.தமிழரசு கோரிக்கையை ஏற்று, அத்தொகுதி சார்ந்த பண்ணப்பட்டி ஊராட்சி, கோட்டைமேட்டில் உள்ள பாலிடெக்னிக் கல்லூரி மாணவர் பாலாஜி மின்வேலியில் சிக்கி மரணம் அடைந்ததால் அவரது தந்தை ராஜேந்திரன் என்பவருக்கு 50 ஆயிரம் ரூபாய்;

நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் டாக்டர் க.நெடுஞ்செழியன் கோரிக்கையை ஏற்று, சின்னதாராபுரம் அருகில் நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்த எஸ்.வெங்கரை கிராமத்தைச் சேர்ந்த இருவரில் நடராஜன் என்பவருக்காக அவரது தந்தை நாட்ராயனுக்கு தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்– விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) திட்டம் வாயிலாக 1 இலட்சத்து 2 ஆயிரத்து 500 ரூபாய் வழங்கப்பட உள்ளதால், அதே விபத்தில் உயிரிழந்த மற்றொருவரான கார்த்திக் என்பவருக்காக அவரது தந்தை ராஜாவுக்கு 50 ஆயிரம் ரூபாய்;

– என முதலமைச்சரின் பொது நிவாரண நிதியில் இருந்து மொத்தம் 11 பேரின் குடும்பங்களுக்கு 5 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் நிவாரணத் தொகையாக வழங்கிட முதலமைச்சர் கலைஞர் இன்று (19.7.2009) ஆணையிட்டுள்ளார்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9